## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை - 2018

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழி அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியானதாக ஆக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் *நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்* பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தினதும் ஆளுகைத் தரப்பினரதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையினைக் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை

இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை மீதான பொறுப்பை ஆளுகைத் தரப்பு கொண்டுள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிறுவனத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது அதிகாரசபையின் கட்டுப்பாட்டு ஆளுகையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க சபை செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நியம இல. 19 இன் பிரகாரம் ஊழிய நலப் பணிக்கொடை கணிப்பீட்டிற்காக ஆயுள் மதிப்பீட்டு முறை (Acturial Valuation Method) காலந்தோரும் செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அவ்வாறான ஆயுள் மதிப்பிடுதல் ஒன்றை மேற்கொள்ளாது ரூபா 38,393,469 தொகை பணிக்கொடை ஏற்பாடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டி ருந்தது. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக் கவில்லை. | நியமத்தின் பிரகாரம் ஆயுள் மதிப்பீட்டு முறையின் அடிப்படை யில் ஊழியப் பணிக் கொடையினைக் கணி ப்பிட்டு நிதிக்கூற்றுக் களில் காண்பித்தல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தெங்கு ஆராய்ச்சி சபைக்கு குத்தகைக்கு வழங்குகையில் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு மீண்டும் அதிகாரசபைக்கு 2016 ஆம் ஆண்டில் கையேற்கப்பட்டிருந்த துக்கன்னாவ தோட்டத்திலுள்ள தும்பு ஆலைக்கு உரித்தான ரூபா 8,724,796 கிரயம் கொண்ட இயந்திரங்கள், கணனிகள் மற்றும் அலுவலகத் தளபாட உபகரணங்கள் உள்ளிட்ட 164 பொருள் விடயங்கள் நிதிக்கூற்றுக்களிற்கு எடுத்துவரப்பட்டிருக்கவில்லை. | தெங்கு ஆராய்ச்சி சபைக்கு குத்தகைக்கு வழங்குகையில் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டு மீண்டும் அதிகாரசபைக்கு 2016 ஆம் ஆண்டில் கையேற்கப்பட்டிருந்த துக்கன்னாவ தோட்டத்திலுள்ள தும்பு ஆலைக்கு உரித்தான இயந்திரங்கள், கணனிகள் மற்றும் அலுவலகத் தளபாட உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து விடயங்களும் மீள விலைமதிக்கப்பட்டு 2019.12.31 ஆந் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்காக தயாரிக்கப்படவுள்ள நிதிக்கூற்றுக்களில் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகாரசபைக்கு கையேற்கப்பட்ட சொத் க்களை மீள விலைமதி ப்பிட்டு நிதிக்கூற்றுக்க ளில் காண்பித்தல் வேண்டும். |

### 1.5.3 கணக்கிணக்கம் செய்யப்படாத கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| விடயம் | நிதிக்கூற்றின் படி பெறுமதி | நேரொத்த அறிக்கையின் படி பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| தேங்காய் ஆலை உரிமையாளர்களிற்கு வழங்கப்படும் சேவைகளிற்கான கடன்பட்டோர் | 4,610,702 | 5,203,848 | 593,146 | 2018.12.31 இல் உள்ளவாறு தேங்காய் ஆலை உரிமை யார்களிடமிருந்து அறவிடப் பட வேண்டிய வரி நீங்கலான தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. 2019.06.01 ஆந் திகதி முதல் சேவை வழங்கப்படுகின்ற சந்தர்ப்பத்திற்கேற்ப ஆலை உரிமையாளர்களிற்கு பட்டியலை வழங்குவதற்கு பொதியிடல் அபிவிருத்திப் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளமையால் 2019.06.01 இன் பின்னர் NBT/VAT உடன் சேர்த்து வருமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பேரேட்டுக் கணக்கு மீதியினை நேரொத்த அறிக் கையின் படியான மீதியுடன் ஒப்பிட்டு வேறுபாட்டிற்கான காரணத்தை கணக்காய்விற்கு தெளிவுபடுத்துதல் வேண்டும். |
| தனியார் கம்பனி ஒன்றிடமிருந்து பெற வேண்டிய மீதி | 182,011 | 33,150 | 148,861 | 2019 ஆம் ஆண்டில் பின்வரும் பற்றுச்சீட்டுக்களின் கீழ் இத்தொகை கிடைத்துள்ளது. பற்றுச்சீட்டு இல. 120051, 120053, 121615, 121616, 121618, 119480 | குறித்த கம்பனியால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மீதி உறுதிப்படுத்தலின் படி வேறுபாடு காணப்படுகின்றமையால் அதனை திருத்துதல் வேண்டும். |

### 1.5.4 தொங்கல் கணக்குகள்

| விடயம் | தொகை | தொங்கலாக இருந்த காலம் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| திரட்டிய நிதியக் கணக்கின் கீழ் காட்டப்பட்டுள்ள தொங்கல் கணக்கின் செலவு மீதி | 1,871,776 | 02 ஆண்டுகள் | இந்த ஐயவினாவில் காட்டப்பட்டுள்ள ரூபா 1,871,776 தொகை இனங்காணப்படாத மீதி அல்ல. அதிகாரசபையால் பேணப்பட்டு வருகின்ற மூன்று தெங்கு ஆலைகளின் (இல. 68, 81 மற்றும் 128) வைப்புக் கணக்கிலுள்ள மூன்று மீதிகளாகும். இந்த மூன்று கணக்குகள் தொடர்பிலும் இடம்பெற்று வருகின்ற வழக்குகளின் தீர்ப்புக் கிடைக்கும் வரை இந்த மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் தொங்கல் கணக்கில் செலவு மீதி காணப் படுதல் பொருத்தமற் றது என்பதனால் அதனை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.5 கணக்காய்விற்கான சான்றின்மை

| விடயம் | தொகை | கிடைக்கப்பெறாத சான்று | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | | |
| (அ) கடன்பட்டோர் | 3,953,855 | பட்டியல்/ மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | தற்போது இடம்பெற்றுவருகின்ற நடைமுறையின் படி உரிய பணம் கிடைத்த பின்னரே பட்டியல் வழங்கப்படுகின்றது. 2019 யூன் மாதம் 01 ஆந் திகதியின் பின்னர் சேவை வழங்கப்படும் சந்தர்ப்பத்திலேயே பட்டியலை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | சரியான முறை பின்பற் றப்பட வேண்டுமென்பதுடன் குறித்த மீதிகளின் உறுதிப்படுத்தலை நேரடியாக கணக்காய்விற்கு மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினரை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) நானாவிதக் கடன்பட்டோர் | 3,976,192 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துமாறு அனைத்துக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதன் பிரதிகள் நிதிப் பிரிவில் உள்ளன. 2019 இன் காசுப் பெறுவனவு மற்றும் | குறித்த மீதிகளின் உறுதிப்படுத்தலை நேரடியாக கணக்காய் விற்கு மேற்கொள்ளு மாறு உரிய தரப்பி னரை அறிவுறுத்துவத ற்கு நடவடிக்கை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | கொடுப்பனவுகளை பரிசோதிப்பதன் மூலம் இந்தக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் தீர்ப்பனவை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். | எடுத்தல் வேண்டும். |
| (இ) நானாவிதக் கடன்கொடுத்தோர் | 9,734,871 | மீதி உறுதிப்படுத்தல் கடிதம் | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளை உறுதிப்படுத்துமாறு அனைத்துக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோரிற்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அதன் பிரதிகள் நிதிப் பிரிவில் உள்ளன. 2019 இன் காசுப் பெறுவனவு மற்றும் கொடுப்பனவுகளை பரிசோதிப்பதன் மூலம் இந்தக் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகளின் தீர்ப்பனவை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். | -மேற்படி- |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தனியார் கம்பனியொன்றிமிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 31,550,000 தொகை 14 ஆண்டு காலமாக அறவிடப்படாது காணப்பட்டது. | தனியார் கம்பனியொன்றான BCC லங்கா கம்பனியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 31,550,000 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துடன் இணங்க முடியவில்லை. இது தொடர்பில் பல்வேறு சந்தர்ப்பங்களில் பல சுற்றுப் பேர்ச்சுவாத்தைகளும் அமைச்சின் தலையீட்டுடன் இடம்பெற்றுள்ளன. BCC லங்கா கம்பனி கூட இத்தொகையினை செலுத்தித் தீர்ப்பதற்கு பொதுத் திறைசேரியிடமிருந்து நிதியினைக் கோரியுள்ளது. | அமைச்சு, பொதுத் திறைசேரி மற்றும் குறித்த கம்பனியுடன் பேச்சுவார்த்தை நடாத்தி இத் தொகை யினை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு | இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2018 பெப்ரவரி 15 ஆந் திகதிய தெ. அ.அ/பரி/ கானி/ 2013/01 ஆம் இலக்க தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் உள்ளக சுற்றறி க்கை. | | | |
| (i) 02 ஆவது பந்தி | முற்பணமொன்றை பெற்றுக் கொண்ட ஆளொருவர் மேலுமொரு முற்பணத் தைக் கோருவாராயின் ஆரம்பத்தில் பெற்றுக் கொண்ட முற்பணத்தை தீர்த்திருத்தல் வேண்டு மாயினும், 09 சந்தர்ப் பங்களில் 06 ஆட்களிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 846,200 தொகையான ஆரம்ப முற்பணத்தைத் தீர்க்காது மீண்டும் ரூபா 1,053,550 முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. | முற்பணமொன்றை பெற்றுக் கொண்ட ஆளொருவர் மேலு மொரு முற்பணத்தை பெற்றுக் கொள்ள முன்னர், ஆரம்பத்தில் பெற்றுக் கொண்ட முற்பணத்தை தீர்தக்க வேண்டிய போதிலும், முற்பணங்களைக் கோருகையில் உச்ச முற்பணத் தொகையினை வழங்குதல் இணைக்கப்பட்டுள்ள பட்டோலையின் படி மட்டுப்படுத் தப்பட்டுள்ளது. இருப்பினும் குறைந்தபட்ச எல்லையைக் காட்டிலும் கூடியளவான முற்ப ணம் தேவைப்படுகையில் தலைவரின் அல்லது பணிப்பா ளரின் விசேட அங்கீகாரத்தின் மீது பணம் விடுவிக்கப்படுகி ன்றது. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு ஆரம்பத்தில் பெற்றுக்கொண்ட முற்பணத்தை தீர்த்ததன் பின்னர் மீண்டும் முற்பணங் களை வழங்குதல் வேண்டும். |
| (ii) 05 ஆம் பந்தி | முற்பணத்தைப் பெற்று அதற்குரிய பணி முடிவுற்ற பின்னர் 03 வேலை நாட்களிற்குள் நியாயமான காரணமின்றி அதனைத் தீர்ப்பதற்குத் தவறின் பெற்றுக்கொண்ட மொத்தத் தொகையின் மீது 2 சதவீத தண்டப் பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், 24 சந்தர்ப்பங் களில் வழங்கப்பட்ட ரூபா 1,527,950 தொகை 2 | தற்போது பணத்தை அறவிடுதல் நாளொன்றிற்கு 2 சதவீதமன்றி வருடத்திற்கு 2 சதவீதம் என அறவிடப்படுகின்றது. இருப்பினும், இவ்வாறு தற்போது பணத்தை அறவிடுவதற்குப் பதிலாக பிரிவுத் தலைவர்களின் அங்கீகாரத்துடன் முற்பணங்கள் வழங்கப்பட்டு அவற்றைத் தீர்க்க வேண்டிய முழுப் பொறுப்பையும் பிரிவுத் | பிரிவுத் தலைவர் களின் கண்காணிப் பின் கீழ் நியாய மான காலத்தினுள் தீர்க்கப்பட முடியாது ள்ள முற்பணங்கள் மீது சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகா ரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | நாட்கள் முதல் 72 நாட்களிற்கு இடைப்பட்ட காலம் தமதிக்கப்பட்டு தீர்க்கப்பட்டிருக்கையில் மேற்குறிப்பிட்டவாறு தண்ட ப்பணம் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தலைவர்களிற்கு ஒப்படைப்பதற்கு 2019 மார்ச் மாதம் இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் ஆலோசனை வழங்கப்பட்டது. | வேண்டும். |
| (ஆ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கை. | உத்தேசநோக்க உப கட்டு நிதி பெற்றுக் கொள்ளும் உத்தியோகத்தரால் அந்த நோக்கம் நிறைவேற்றப்பட்ட வுடன் கட்டுநிதி தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 14 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 783,600 கட்டுநிதியினை தீர்ப்பதற்கு ஒரு மாதத்திற் கும் மேல் தாமதிக்கப்பட்டி ருந்தது. | அலுவலகத்திற்கு வெளியே இடம்பெறுகின்ற பயிற்சி/ விழிப்பு ணர்வூட்டல் நிகழ்ச்சித்திட்டங் களிற்காகவே முற்பணங்கள் பெறப்பட்டுள்ளன. ஆந்த நிகழ்ச் சித்திட்டங்களிற்காக வெளித் தரப்பினர்களிடமிருந்து மூலப் பொருட்களும் ஏனைய பொருட் களும் பெற்றுக் கொள்ளப்படுவ துடன் வெளிக்களப் பணிகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்கள் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் பூரணப்படுத்தப்பட்ட பின்னர் குறித்த சிட்டைகள் அடங்கிய கோவைகளைக் கையளிப்பதற் கும் மேலதிகமாகப் பெற்றுக் கொண்ட எரிபொருளை சீராக்கு வதற்கும் காலம் எடுக்கின்றது. அது தவிர்ந்த ஏனைய சந்த ர்ப்பங்களில் எஞ்சிய தொகை களை எடுத்துச்சென்று நாரஹே ன்பிட பிரதான அலுவல கத்தில் கையளிப்பதற்கு காலமெடுப்ப தனால் துரிதமாக வங்கியில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது.<br><br>ஏதிர்காலத்தில் இத்தாமதத்தை இல்லாது செய்வதற்காக பிரயா ணத் தேவைகளை முறையாகத் திட்டமிடுவதற்கும் எரிபொருளி ற்கு மேலதிகச் செலவேற்படும் எனக் கருதும் சந்தர்ப்பங்களில் அதனை மதிப்பிட்டு முற்பண மாகப் பெற்றுக்கொள்வதற்கும் மூலப்பொருட்கள் மற்றும் கூட்ட த்திற்குத் தேவையாயன பொருட் களின் கொள்வனவுடன் | முற்பணங்களைத் தீர்ப்பதில் காணப்ப டுகின்ற தாமதத்திற் கான காரணங்க ளைக் கண்டறிந்து தேவையான நடவடி க்கைகளை மேற் கொண்டு விரைவா கத் தீர்ப்பதற்கு அறிவுறுத்தல் வழங் கப்படுதல் வேண் டும். |

| | | |
|---|---|---|
| | | தொடர் புடைய சிட்டைகளை விரைவா கச் சமர்ப்பிப்பதற்கு முடியுமான நிறுவனங்களிடமிருந்து மாத்திரம் பொருட்களைப் பெற்றுக் கொள் வதற்கும் நிகழ்ச்சித்திட்டங்கள் முடிந்த மறுதினமே சிட்டை களைத் தீர்ப்பதற்கும் அறிவுறு த்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |

**2. நிதிசார் மீளாய்வு**

**2.1 நிதிசார் விளைவுகள்**

மீளாய்வாண்டிற்கான தொழிற்பாட்டு விளைவுகள் ரூபா 74,288,048 மிகையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 140,413,563 ஆகும். அதற்கமைய, நிதி விளைவுகளில் ரூபா 66,125,515 பின்னடைவு அவதானிக்கப்பட்டது. ஏனைய வருமானம் ரூபா 126,108,627 ஆல் குறைவடைந்தமையே நிதி விளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயப் போக்குகளின் பகுப்பாய்வு**

மீளாய்வாண்டிற்காக வருமான மற்றும் செலவின விடயங்களை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஏனைய வருமனத்தில் குறைவும் வழங்கல் தேவைகள் மற்றும் திருத்துதல் செலவினங்களில் அதிகரிப்பும் ஏற்பட்டிருந்தன.

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

நடைமுறைச் சொத்துக்கள் விகிதம் முன்னைய ஆண்டின்: 1:8 இலிருந்து மீளாய்வாண்டில் 1:10 வரை அதிகரித்திருந்ததுடன், மொத்த இலாப மற்றும் தேறிய இலாப விகிதங்கள் முறையே 33 சதவீதத்திலிருந்து 21 சதவீதம் வரையிலும் 31 சதவீதத்திலிருந்து 19 சதவீதம் வரையிலும் குறைவடைந்திருந்தன.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திடமிருந்து அதிகார சபைக்கு ஏறத்தாழ 04 ஆண்டு காலமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா 7,060,032 தொகையினை எதிர்காலத்தில் இடம்பெறவுள்ள நிகழ்ச்சிகளிற்கு எதிராக எதிரீடு செய்வதற்கு | ரூபா 7,060,032 அதற்கு முன்னர் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாப னத்திற்குச் செலுத்தப்பட்டதுடன், இது தொடர்பில் இலஞ்ச அல்லது மோசடிக் குற்றச்சாட்டு புலனாய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகையால் அவர்களிடமிருந்து | நீண்டகாலமாக அறவி டப்பட வேண்டிய தொகை யினை அறவிடுவதற்கு அல்லது அதற்குப் பதி லாக வேறு நிகழ்ச்சி களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் |

| | | |
|---|---|---|
| இலங்கை ரூபவாஹி னிக் கூட்டுத்தாபனத்தினால் 2016 செப்தெம்பர் 06 ஆந் திகதிய கடிதத்தினால் இணக்கம் தெரிவித் திருக்கையில் சிங்கள புத்தாண்டி ற்காக 2018 ஏப்ரல் 10 முதல் 15 ஆந் திகதி வரை ஒளிபரப்புச் செய்யப்பட்ட நிகழ்ச்சிகளிற்காக செலுத்தப்பட வேண்டிய ரூபா 1,524,900 மீதியினை இத்தொகைக் கெதிராக எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காது மொத்தத் தொகையும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட் டிருந்தமையால் மேற்படி தொகை யினை தீர்ப்பதற்கிருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | குறித்த தொகைக்கான ஒளிபரப்பு நிகழ்ச்சிகளை எதிரீடு செய்வதற்காக 2017.10.20, 2016.10.06 மற்றும் 2018.06.11 ஆந் திகதிகளில் விசாரிக்கப்பட்டது. இருப்பினும், அது தொடர்பில் உரிய பதில் கிடைத்திருக்கவில்லை. | வேண்டும். |
| (ஆ) தெங்கு சார்ந்த உற்பத்திகளிற்காக அதிகாரசபையில் பதிவுசெய்திருந்த போதிலும், தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளாதுள்ள நிறுவனங் களை அதன்பால் செலுத்துவதற்காக ஒரு மாவட்டத்திலுருந்து இருவர் வீதம் 20 கைத்தொழிலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களிற்கு 400 கொள்கலன்களை பகிர்ந்தளிப் பதற்கு செயல்நடவடிக்கைத் திட்டத் தில் ரூபா 1,600,000 ஒதுக்கப்பட் டிருந்த போதிலும், அது நடை முறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திலுள்ள இந்த செயற்பாட்டை அமுல்படுத்து வதற்காக 563/பீடீ/04 ஆம் இலக்க பணிப்பாளர் சபை விஞ்ஞாபனத்தி னால் அங்கீகாரம் கோரப்பட்டிருந்த போதிலும் 563.08 ஆம் இலக்க தீர்மானத்தினால் இதற்காக அங்கீகா ரம் கிடைத்திருக்காமையே இதற் கான காரணமாகும். அங்கீகாரத் தைப் பெறமுடியுமென்ற எதிர்பார்ப் பில் கொள்கலன்களைப் பெற்றுக் கொள்வதற்கான கொள்வனவு நடவடிக்கைகளிற்காக கட்டுப்பாட்டுப் பிரிவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபை அங்கீகாரம் கிடைக்காமையால் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டத்திற்கமைய செயற் படுவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) தேவையினை இனங்காணாது 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 5,804,321 பெறுமதியான ஆய்வுகூடப் பொருள் இருப்பிலிருந்து ரூபா 3,461,702 பெறுமதியான இருப்பு விளைவற்று வைக்கப்பட்டிருந்தது. | களஞ்சியத்தில் காணப்படுகின்ற இருப்புக்கள் தொடர்பில் கண்டிப்பாக கவனம் செலுத்தி எதிர்வரும் ஆண்டிற்கான தேவை கோரப்படும். பொதுவாக இறக்குமதி செய்தல் தாமதம் இடம்பெறுவதனால் தொடர்ச்சியான பரிசோதனையை மேற்கொண்டு பொதுவாக எதிர்வரும் 6 – 8 மாதங்களிற்குத் தேவையான | தேவையினை உரியவாறு இனங்கண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இருப்பினைக் களஞ்சியப்படுத்துதல் பொதுவான நடைமுறையாகும்.<br><br>இந்தி இருப்பில் அநேகமானவை 2017 இன் இறுதியிலும் 2018 இன் ஆரம்பத்திலும் கொள்வனவு செய்யப் பட்டவயையாகும். 2017/2018 ஆம் ஆண்டுகளில் குறைந்த எண்ணிக்கை யில், மாதிரிகள் பரிசோதனைக்காக கிடைத்திருந்தமையால் களஞ்சியத்தி லுள்ள பொருட்களை பயன்படுத் துதல் குறைவடைந்துள்ளது. | |
| (ஈ) தெங்கு சார்ந்த உற்பத்திகளில் ஒட்டுவதற்காக தேவைப்பாட்டினை இனங்காணாது 2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 7,184,234 பெறுமதியுடைய ஸ்ரிகர் இருப்பில் ரூபா 4,076,000 பெறுமதி யானவை 02 ஆண்டுகளிற்கும் மேலாக விளைவற்று வைக்கப்பட்டி ருந்தன. | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் தெங்கு உற்பத்திகள் வீழ்ச்சியடைந்திருந்தமை காரணமாக நாம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடிந்திருக்கவில்லை. இருப்பினும், 2019 ஆம் ஆண்டில் தெங்கு உற்பத்திகள் முன்னரைப் போன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால் ஸ்ரிகர் சுற்றுத் துண்டுகளிற்கான கேள்வி அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகி ன்றது. அத்துடன், தேய்காய் எண்ணெய் உற்பத்தியின் மேம்பாட்டி ற்காக விசேட செயற்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளமையால், இந்த சுற்றுத்துண்டுகளின் பாவனை மேலும் அதிகரிக்கக்கூடும். | கொள்வனவு செய்கையில் தேவையினை உரியவாறு இனங்கண்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) அதிகாரசபையினால் தேங்காய் ஏலமிடலிற்காக இணையதளத்தினூ டாக கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கும் நடவடிக்கைகளை பூரணப்படுத்துவதற் காக தனியார் கம்பனியொன்றிற்கு 2013 முதல் 2016 வரை ரூபா 1,018,100 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இணையதளத்தினூடாக ஏலமிடல் இடம்பெறாமையால் மேற்படி செலவினம் பயனற்ற செலவினமாகியிருந்தது. | தேங்காய் ஏலமிடலை இணையதளப் படுத்துதல் என்பது வேகமாக அதிகரித்துச் செல்லும் டிஜிரல் உட்கட்டமைப்பு வசதியுடன் இணைந் ததாக காணப்படுவதுடன் தேங்காய் சந்தைப்படுத்தல் துறையில் இணையதளம்/கணனிப் பயன்பாடு தொடர்பான அறிவு குறைவு என்பதனால் (விசேடமாக தேங்காய் கொள்வனவாளர்களிற்கு) இணைய தளத்தினூடாக தேங்காய் ஏலமிட லில் பின்தங்கிய நிலையொன்று தற்போது ஏற்பட்டுள்ளது. | இணையதளத்தைப் பயன் படுத்துதல் தொடர்பில் காணப்படுகின்ற சிக்கல் களிற்கு தீர்வுகண்டு இதனை விரைவாக நடை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஊ) அதிகாரசபையின் ஆய்வுகூடத்தை நவீனப்படுத்துவதுடன் தொடர்புடைய ரூபா 17,105,433 ஒப்பந்தம் 2017 திசெம்பர் 25 ஆந் திகதி பூரணப்படுத்தப்பட வேண்டியிருந்த துடன், அதன் கண்காணித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற மதியுரைக் கம்பனிக்கு ரூபா 1,400,000 செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை குறித்த நவீனப்படுத்தல் வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்க வில்லை. ஆகையால், ஆய்வுகூடப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியாது போயிருந்தமையால் அதிகாரசபைக்கு ரூபா 9,297,800 வருமானம் இழப்பாகியிருந்தது. | தற்போது ஆய்வுகூடத்தை நவீனப் படுத்தும் வேலைகள் பூரணப்படுத்தப் பட்டுள்ளதுடன், ஆய்வுகூடச் சேவை கள் விரிவுபடுத்தப்பட்டு நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய அனைத்து தெங்கு சார்ந்த உற்பத்திகளிற்கான பரிசோதனை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. | ஆய்வுகூடச் சேவைகளை மேலும் விரிவுபடுத்தி பரிசோதனை நடவடிக்கை களை துரிதப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) செயற்பாட்டுக் குத்தகையின் கீழ் இரண்டு உத்தியோகத்தர்களிற்கு வழங்கப்பட்டிருந்த இரண்டு வாகனங் கள், அந்த உத்தியோகத்தர்கள் அதிகாரசபையிலிருந்து ஓய்வுபெற் றமை மற்றும் விலகிச் சென்றமை காரணமாக பயணித்தலில் ஈடுபடுத்தப் படாதிருந்ததுடன், அந்த வாகனங்க ளிற்காக 2018 செப்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி முதல் திசெம்பர் மாதம் வரை செலுத்தியிருந்த ரூபா 752,100 தொகை சிக்கனமற்ற செலவினமாகி யிருந்தது. | இந்த வாகனம் ஒதுக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் ஓய்வுபெற்றமை யால் செப்தெம்பர் முதல் திசெம்பர் வரை வாகனத்தைப் பயன்படுத்தாது பணம் செலுத்தப்பட்டுள்ளது. துற்போது இந்த வாகனம் பதிற்கடமைப் பணிப்பாளர் (பொதியிடல் அபிவிருத்தி) இற்கு இணைக்கப்பட்டுள்ளது. | மாதாந்தம் குத்தகை தவணைப்பணம் செலுத்த ப்படுகின்ற வாகனங்களை மிகவும் பயனுள்ள விதத் தில் பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடி க்கை எடுத்தல் வேண டும். |
| (ஏ) அதிகாரசபையின் சான்றுறுதிப்படுத் திய தேங்காய்களை கொள்வனவு செய்வதற்காக இலத்திரனியில் மற்றும் அச்சு ஊடகங்களினூடாக பொதுமக்களையும் பாவனையாளர் களையும் அறிவுறுத்துவதற்காக செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 2,480,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையிலும், இந்த அறிவுறுத்தல் நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டிருக்க வில்லை. | அரசாங்க தொலைக்காட்சி அலைவரிசைகளினூடாக பிரச்சாரம் செய்வதற்கு ரூபா 2,485,450 கூறுவிலை கிடைத்திருந்தது. இருப்பினும், இக்காலத்தில் நாட்டில் நிலவிய அரசியல் ஸ்தீரமற்ற தன்மை காரணமாக பணிப்பாளர் சபையொன்று இன்மையால் இப்பணத்தைச் செலுத்துவதில் சிக்கல் நிலை காணப்பட்டது. இதன் காரணமாக விளம்பரமொன்றைத் தயாரிப்பதற்காக நிறுவனமொன்றிற்கு ஒப்படைப்பதற்கு அல்லது அதனை ஊடகங்கள் ஊடாக | தெங்கு சார்ந்த உற்பத்திகள் தொடர்பில் பொதுமக்களையும் பாவனையாளர்களையு ம் அறிவுறுத்துவதற்காக திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | விளம்பரப் படுத்துவதற்கு முடிந்திருக்கவில்லை.<br><br>2019 யூன் மாதத்தில் இலத்திரணியல் ஊடகங்களின் ஊடாக பிரச்சார பணிகளை மேற்கொள்வதற்கு கலந்துரையாடப் பட்டு அதற்காக சுகாதார அமைச்சின் நோய் நிவாரண மேம்படுத்தல் பிரிவின் ஒத்துழைப் பைப் பெற்றுக் கொள்வதற்கு தீர்மானமாகியிருந்தது. | |

## 3.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள ரூபா 6,084,957 பெறுமதியான 3,529,793 ஸ்ரிகர்களில் 1,271,834 ஸ்ரிகர்கள் ஆலை உரிமையார்களிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதுடன், ஏறத்தாழ 1,069,391 ஸ்ரிகர்கள் பொதியிடல் பிரிவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. அதற்கமைய, களஞ்சியத்திலிருந்து வழங்கப்பட்டுள்ள ரூபா 1,402,507 பெறுமதியான 1,188,568 ஸ்ரிகர்களின் பற்றாக்குறை தொடர்பில் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | ஸ்ரிகர்களின் பற்றாக் குறை தொடர்பில் விசாரணை நடாத்தப்பட்டு அது தொடர்பில் கணக்காய்விற்கு அறிவித் தல் வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் அதிகார சபையின் பதவியணியில் 26 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவற் றில் பணிப்பாளர் (பொதியிடல் அபிவிருத்தி), சந்தைப்படுத்தல் பணிப்பா ளர் (சர்வதேசம்), சட்ட உத்தியோகத்தர், ஆராய்ச்சி உத்தியோகத்தர், பொதியிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர், பொருளா தார ஆய்வு உத்தியோகத்தர் போன்ற பதவிகள் ஒன்று முதல் இரண்டு ஆண்டுகளாக வெற்றிடமாகக் காணப்ப ட்ட போதிலும், குறித்த பதவிகளிற்குத் தகைமையான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | கருத்துத் தெரிவிக்கப்பட்டிருக்கவி ல்லை. | அதிகாரசபையின் நோக்கங்கள் மற்றும் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |